வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவணகுமார்

தேதி 10.05.2025 நேரம் இரவு 8 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர், முப்படைகளின் தலைமை தளபதி மற்றும் முப்படை தலைவர்கள் உள்ளிட்டோருடன் இன்று முக்கிய ஆலோசனை மேற்கொண்டார்.

இந்தியாவின் வான் பாதுகாப்பு கட்டமைப்பான எஸ்-400 ஐ அழித்ததாக பாகிஸ்தான் கூறியுள்ளது பொய்யான செய்தி என வெளியுறவுத் துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி, தெரிவித்துள்ளார்.

வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டால், பொதுமக்கள், அரசிடமிருந்து வரும் அறிவுரைகளை முழு கவனத்துடன் பின்பற்ற வேண்டும் என புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் கூறியுள்ளார்.

சர்வதேச நிதியம் பாகிஸ்தானுக்கு கடனுதவி வழங்கியுள்ளதை ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா கண்டித்துள்ளார்

சண்டை நிறுத்தம் (11)

இந்தியாவும் பாகிஸ்தானும் துப்பாக்கி சூடு மற்றும் ராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்திக் கொள்ள ஒப்புக் கொண்டுள்ளன.

வெளியுறவு செயலர் திரு விக்ரம் மிஸ்ரி இன்று புதுடெல்லியில் இதற்கான அறிவிப்பை வெளியிட்டார். பாகிஸ்தானிய ராணுவ நடவடிக்கை துறை தலைமை இயக்குநர் இன்று பிற்பகல் போர் நிறுத்தம் பற்றிய பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்ததாகவும், இதை தொடர்ந்து விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டு, புரிந்துணர்வு எட்டப்பட்டதாகவும் அவர் கூறினார். நிலம், நீர், ஆகாயம் ஆகிய மூன்றிலும் துப்பாக்கிச் சண்டை மற்றும் இராணுவ நடவடிக்கையை நிறுத்திக் கொள்ள, பேச்சு வார்த்தையின் போது இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டதாக அவர் தெரிவித்தார். சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை அமலுக்கு கொண்டுவர இருதரப்பிலும் அறிவுறுத்தல் வழங்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார். இரு நாட்டு இராணுவ செயல்பாடுகள் துறைத் தலைமை இயக்குநர்களும், மே-12 ஆம் தேதி மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்கள் என்று திரு மிஸ்ரி மேலும் தெரிவித்தார்.

இந்த சண்டை நிறுத்தம் நேரடியாக இரு நாடுகளுக்கும் இடையே எட்டப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெளிவுபடுத்தி உள்ளது. எந்த இடத்திலும், எந்த பிரச்சனை குறித்தும் பேச்சுவார்த்தை நடத்த முடிவு எடுக்கப்படவில்லை என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

*முப்படை தளபதி-மோடி ஆலோசனை (9)*

முன்னதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி தமது இல்லத்தில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், முப்படைகளின் தலைமை தளபதி ஜெனரல் அனில் சவுகான், முப்படை தலைவர்கள் உள்ளிட்டோருடன் முக்கிய ஆலோசனை மேற்கொண்டார். எல்லையோர மாநிலங்களில் மக்கள் வசிக்கும் பகுதிகளை குறிவைக்கும் வகையிலான, பாகிஸ்தானிய ராணுவத்தின் தாக்குதலுக்கு இந்தியா தக்க பதில் நடவடிக்கைகளுக்கு இடையே இந்த சந்திப்பு நடைபெற்றது. அப்போது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவலும் உடனிருந்தார்.

*விக்ரம் மிஸ்ரி* 1 (8)

முன்னதாக, வெளியுறவுத் துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி, கர்னல் சோபியா குரேஷி மற்றும் விங்க் கமாண்டர் வியோமிகா சிங் ஆகியோர் புதுடெல்லியில் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பேசிய திரு மிஸ்ரி, இந்திய விமானப்படை தளத்தை பாகிஸ்தான் தாக்கியுள்ளதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்று கூறினார். மேலும், இந்தியாவின் வான் பாதுகாப்பு கட்டமைப்பான எஸ்-400 ஐ அழித்ததாக பாகிஸ்தான் கூறியுள்ளது பொய்யான செய்தி என்றும் அவர்

தெரிவித்தார். இந்த சந்திப்பின் போது விங்க் கமாண்டர் வியோமிகா சிங் ஆபரேஷன் சிந்தூர் குறித்து கூறுகையில்,

வாய்ஸ்

*வாய்ஸ்* (16)

பாகிஸ்தானின் அத்துமீறிய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக தொழில்நுட்ப உள் கட்டமைப்பு, கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் ரேடார் தளங்கள், ஆயுத சேமிப்பு பகுதிகள் உள்ளிட்ட பாகிஸ்தான் ராணுவ இலக்குகள் மீது இந்திய ஆயுதப்படைகள் துல்லியமான தாக்குதல்களை நடத்தியுள்ளதாக கூறினார். பாகிஸ்தான் ராணுவ துருப்புகள் முன்னேறி வருவதாகவும், அதனை எதிர்கொள்ள இந்திய ஆயுதப்படைகள் தயார் நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், இந்திய விமானப்படை தளங்கள், பாதுகாப்பாக இருப்பதாக கூறிய வியோமிகா அது தொடர்பாக இன்று எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் வெளியிட்டார். பாகிஸ்தான் கோழைத்தனமாக குடியிருப்பு பகுதிகளையும், பள்ளிகளையும், கோவில்களையும் குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக அவர் கூறினார். 26 நகரப் பகுதிகளை குறிவைத்து வான்வழி தாக்குதலை பாகிஸ்தான் நடத்தியதாகவும், அவை அனைத்தையும் இந்தியா முறியடித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். துல்லிய இலக்குகளை

தாக்கும் சக்தி வாய்ந்த அதி வேக ஏவுகணைகளை செலுத்தும் பாகிஸ்தானுக்கு இந்திய ஆயுதப்படைகள் தக்க பதிலடி கொடுத்து வருவதாகவும் கூறினார்.

*விக்ரம் மிஸ்ரி* 2(4)

இந்த செய்தியாளர் கூட்டத்தில் கர்னல் சோபியா குரேஷி பேசுகையில், ஸ்ரீநகர், அவந்திப்பூர், உதம்பூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள விமான தளங்கள், மருத்துவமனைகள், பள்ளி வளாகங்கள் ஆகியவற்றை குறிவைத்து பாகிஸ்தான் பொறுப்பற்ற முறையில் தாக்கி வருவதாக தெரிவித்தார்.

*மன்சுக் மாண்டவியா* (11)

புதுச்சேரி மாநில பாஜக நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்க வந்துள்ள மத்திய தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் இளைஞர் நலன் அமைச்சரும் புதுச்சேரிக்கான பாஜக தேர்தல் பொறுப்பாளருமான திரு மன்சுக் மாண்டவியா மரியாதை நிமித்தமாக துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனை ஆளுநர் மாளிகையில் இன்று சந்தித்து உரையாடினார். இதனை தொடர்ந்து, சட்டப்பேரவையில் முதலமைச்சர் திரு

ரங்கசாமியையும் அவர் சந்தித்தார். இந்த சந்திப்பின் போது, சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கல்யாணசுந்தரம், திரு ராமலிங்கம், முன்னாள் மத்திய இணையமைச்சர் திரு பொன் ராதாகிருஷ்ணன், பாஜக மேலிட பொறுப்பாளர் திரு நிர்மல் குமார் சுரானா ஆகியோர் உடனிருந்தனர்.

*சவுகான்* (4)

நாட்டில் போதுமான அளவு உணவுப் பொருட்கள் கையிருப்பில் உள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார். புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அவசர கால கட்டங்களில் பொதுமக்கள் அமைதி காக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

*விமான சேவை* (11)

வடக்கு மற்றும் மேற்கு இந்தியாவின் அமிர்தசரஸ், சண்டிகர், ஜம்மு, ஸ்ரீநகர், பதன்பூர் உள்ளிட்ட 32 விமான நிலையங்கள் வரும் 15 ஆம் தேதி

வரை தற்காலிகமாக மூடப்படுவதாக இந்திய விமான ஆணையம் அறிவித்துள்ளது. டெல்லி விமான நிலையத்தின் விமான சேவைகள் இன்று வழக்கம் போல் இயக்கப்படுகின்றன. பாதுகாப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு பயணிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இதேபோல், புதுச்சேரி, லாஸ்பேட்டையில் அமைந்துள்ள விமான நிலையத்திற்கும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இங்கு துப்பாக்கி ஏந்திய காவல் துறையினர், பாதுகாப்பு படையினர், பாதுகாப்பு பணியில் அமர்த்தப் பட்டுள்ளனர். இதுகுறித்து எமது செய்தியாளர் தரும் கூடுதல் தகவல்......

வாய்ஸ்

*நிர்மலா* (6)

வங்கி மற்றும் நிதி சேவை தொடர்பான எந்த வித சவாலையும் சமாளிக்க அனைத்து வங்கிகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அறிவுறுத்தி உள்ளார். பொது மற்றும் தனியார் துறை வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்களின்

நிர்வாக இயக்குநர்கள், தலைமை நிர்வாக அதிகாரிகளுடன் தொடர்பு இருக்க வேண்டும் என்றும் என்றும் அவர் அறிவுறுத்தி உள்ளார்.

*அஸ்வினி வைஷ்ணவ்* (4)

எல்லைப் பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு உதவும் வகையில் பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து கூடுதல் சிறப்பு ரயில்களை இயக்க மத்திய ரயில்வேத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் உத்தரவிட்டுள்ளார்.

*குலோத்துங்கன்* (7)

புதுச்சேரி அரசு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதன்படி மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படியும், எந்தவொரு தவறான அல்லது சரிபார்க்கப்படாத தகவல்களை நம்ப கூடாது என்றும் தெரிவித்துள்ளார். தவறான தகவல்களை பரப்புவோர் மீது பேரிடர் மேலாண்மை சட்டத்தின் 54 ஆவது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

வாய்ஸ்

*குலோத்துங்கன் வாய்ஸ் (18)*

வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டால், பொதுமக்கள், அரசிடமிருந்து வரும் அறிவுரைகளை முழு கவனத்துடன் பின்பற்ற வேண்டும். பறந்து வரும் இடிபாடுகளிடமிருந்து தற்காத்துக் கொள்ள ஜன்னல்கள் ஏதும் இல்லாத அறையில் வீட்டில் உள்ள புத்தங்கள், மெத்தைகள் மற்றும் மேஜைகள் கொண்டு தற்காலிக குடில் போன்று அமைத்துக் கொள்ள வேண்டும். போதுமான உணவு, மற்றும் குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை சேமித்து வைக்க வேண்டும். மேலும், வான்வழி தாக்குதலின் போது வெளியில் செல்வதும், புகைப்படம் எடுப்பதும் கூடாது. ஜன்னல்கள் அருகில் செல்ல வேண்டாம். மக்கள் கூட்டமாக திறந்த வெளிகளில் கூடாமல், பீதியடையாமல் இருக்க வேண்டும். தேவையற்ற பயணங்களை தவிர்க்கவும், அனைத்தும் சரியாகிவிட்டதாக அரசு அலுவலர்கள் தெரிவிக்கும் வரை வீட்டின் உள்ளேயே இருக்க வேண்டும் போன்ற அறிவுரைகளை மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ஆபரேஷன் சிந்தூர் (5)*

ஆபரேஷன் சிந்தூரின் ஒரு பகுதியாக கடந்த 7 ஆம் தேதி எடுக்கப்பட்ட ஒரு பகுதியாக ஜெய்ஷ்-இ-முகமது மற்றும் லஷ்கர்-இ-தொய்பா வை சேர்ந்த, முடாசர் காதியன், ஹபீஸ் முகமது ஜமீல், முகமது யூசுப் அசார், காலிப் மற்றும் முகமது ஹசன் கான் ஆகிய 5 தீவிரவாதிகள் பாகிஸ்தானில் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ஷம்பா கோவில் தாக்குதல்*(11)

ஜம்மு காஷ்மீர் ரூப் நகரில் உள்ள ஷம்பாகோவில் பாகிஸ்தான் ராணுவத்தால் தாக்கப்பட்டது. இன்று அம்மாநில முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா அப்பகுதிக்கு சென்று பார்வையிட்டார். முன்னதாக, ரஜோரி மாவட்ட ஆட்சி வளர்ச்சி துறை கூடுதல் ஆணையர் ராஜ்குமார் டாப்பா பாகிஸ்தான் தாக்குதலில் கொல்லப்பட்டது குறித்து வருத்தம் தெரிவித்துள்ளார். பொறுப்பு மிக்க சிறந்த அதிகாரியை நாம் இழந்துவிட்டதாக அவர் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, சர்வதேச நிதியம் பாகிஸ்தானுக்கு கடனுதவி வழங்கியுள்ளதை திரு உமர் அப்துல்லா கண்டித்துள்ளார். இந்த நிதியுதவி மூலம் தற்போதைய பதற்றம் தணியாது என்றும், மேலும், பயங்கரவாத

செயலிலேயே பாகிஸ்தான் ஈடுபடும் என்றும் திரு உமர் அப்துல்லா விமர்சித்துள்ளார்.

குரேஷி (10)

பாகிஸ்தான் இந்தியாவிற்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கையினால், அந்நாட்டில் பெரும் இழப்புகள் ஏற்பட்டுள்ளதாக இந்திய கர்னல் சோபியா குரேஷி தெரிவித்துள்ளார். இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் பயங்கரவாத முகாம்கள் மற்றும் வசதிகளை மட்டுமே இலக்காக கொண்டு ஆபரேஷன் சிந்தூர் நடத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். இந்திய படையினரால் எந்த மத தலங்களும் குறி வைக்கப்படவில்லை என்றும், இந்தியா ஒரு மத சார்பற்ற நாடு என்றும் குரேஷி கூறினார். மாறாக பாகிஸ்தான் நமது எஸ்-400 மற்றும் பிரமோஸ் ஏவுகணைகளை சேதப்படுத்தியதாக பொய்யான தகவல்கள் பரப்பியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

*அரசு ஆலோசனை* (3)

சமூக விழிப்புணர்வு இயக்கத்தை தவிர வேறு எந்த நிகழ்ச்சிகளிலும் சிவில் பாதுகாப்பு, வான்வழி தாக்குதல், சைரன் ஒலிகளை

பயன்படுத்துவதை தவிர்க்குமாறு அனைத்து ஊடக சேனல்களுக்கும் அரசு அறிவுறுத்தி உள்ளது.

*விளையாட்டு* (6)

ஷாங்காயில் நடைபெறும் உலகக் கோப்பை வில்வித்தை போட்டிகளில் இந்தியா இன்று 1 தங்கம் உட்பட 3 பதங்கங்களை பெற்றுள்ளது. ஆடவர் குழு பிரிவில் இந்தியா மெக்சிகோவை 232-228 என்ற புள்ளி கணக்கில் வென்று தங்கப் பதக்கத்தை கைப்பற்றியது.

மகளிர் குழு வெள்ளிப்பதக்கத்தையும், கலப்புக் குழு பிரிவில் வெண்கல பதக்கத்தையும் இந்தியா வென்றது.

*கேலோ இண்டியா* (5)

புதுடெல்லியில் நடைபெற்ற கேலோ இண்டியா விளையாட்டு போட்டிகளில் மகளிர் துப்பாக்கி சுடும் இறுதி சுற்று போட்டிகளில் 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் டெல்லியை சேர்ந்த நாம்யா கபூர் தங்கப்பதக்கமும், மத்திய பிரதேசத்தை சேர்ந்த அஞ்சலி மகேந்திர பகவத் வெள்ளி பதக்கத்தையும், ராஜஸ்தானை சேர்ந்த கானக் வியாஸ் வெண்கல பதக்கத்தையும் வென்றனர்.

கேதர்நாத் (9)

உத்ராகண்டில் உள்ள கேதர்நாத்-தாம் முக்கான விமான சேவை சில மணி நேரங்களுக்கு மட்டுமே நிறுத்தப்பட்டதாகவும், தற்போது மீண்டும் தொடங்கப்பட்டு, எந்த இடையூறும் இல்லாமல் யாத்திரை சீராக நடத்தப்பட்டு வருவதாகவும் அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர்சிங் தாமி கூறியுள்ளார். இதுவரை, 4 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் புனித யாத்திரை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பக்தர்கள் எந்தவிதமான வதந்திகளையும் நம்ப வேண்டாம் என்றும், அவர்களின் பாதுகாப்பிற்கும், வசதிக்கும் மாநில அரசு தொடர்ந்து செயல்பட்டு வருவதாகவும் முதலமைச்சர் திரு புஷ்கர்சிங் தாமி கூறியுள்ளார்.